2024 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவு, 2024 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவை, பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(அஆ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2024), மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

@ 21-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2024 பிப்ரவரி 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், இந்தச் சட்டமுன்வடிவில் உங்களுக்கு என்ன சந்தேகம்?

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்பமை பேரவைத் தலைவர் அவர்களே, ஐயங்களைப் பதிவு செய்வதற்காக மாத்திரமல்ல; உள்ளத்தில் எழுகிற நன்றி உணர்ச்சியைப் பதிவு செய்வதற்காக ஒரு நிமிடம் வாய்ப்பை நான் கேட்கிறேன். 'வரப்புயர நீர் உயரும்' என்று சொன்னார் அறிவுத் திருமகள் ஔவை. வரப்பின் வரம்பிற்கு வெளியே இருக்கின்ற மானாவாரி நிலங்களையும், பாசன வாய்க்காலின் பரப்புக்குள் கொண்டு வந்திருக்கிற, உடன்பிறப்பு என்கிற சொல்லின் உயிர் வடிவமாய் வாழ்ந்துகொண்டிருக்கிற மாண்பமை தமிழக முதல்வர் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றியை நான் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று நான் கேட்ட கோரிக்கைகள் தட்டச்சு செய்யப்பட்டு, என் மேசையின்மீது வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மை உலர்வதற்கு முன்னதாகவே அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரையும் உள்ளடக்கிய அரசாக, இந்த அரசு இருக்கிறது என்பதைப் பதிவு செய்வது என்னுடைய கடமை.

பிற்பகல் 1–50

75–வது குடியரசு தின விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், இப்படிப்பட்ட புகழ்பெற்ற—25 ஆண்டு காலமாக இது ஒரு விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்பமை மறைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் முதன்முறையாக பட்டியலின மக்களுக்கான, பழங்குடியின மக்களுக்கான சிறப்பு உட்கூறு திட்டத்தை தமிழகத்திலே அறிமுகப்படுத்தியவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் அதைத் திட்டமாக உருவாக்கினார்; இலையிலே உணவு போடப்பட்டது, ஆனால், அவர்கள் சாப்பிட்டார்களா, இல்லையா என்று அவர்கள் சாப்பிடுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்கிற அடிப்படையிலே, அதற்கு ஒரு சட்டம் மாண்பமை முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இசைவளித்து அதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிற மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், தமிழ்ப் புதல்வராக

2024 பிப்ரவரி 22] [திரு. ம. சிந்தனை செல்வன்]
உரையைப் பதிவு செய்திருக்கிற மரியாதைக்குரிய அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவைக்கும் என் மனம் நிறைந்த நன்றியை நான் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவு தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு மகத்தான சட்டமுன்வடிவு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிற தமிழக அரசுக்கு எனது நன்றியைப் பதிவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவு வரவேற்பைப் பெறுகிறது. நாங்கள் பாராட்டுகிறோம். அதே நேரத்தில், இச்சட்டத்தைப் பலப்படுத்த வேண்டும் என்கின்ற வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து உயர்நிலை கண்காணிப்புக் குழுக் கூட்டத்திலும் கொண்டு வந்தார்கள். ஆனால், இந்தச் சட்டமுன்வடிவிலே திருத்தம் வேண்டுமென்று நான் கோருகிறேன்.

பட்டியலின மக்களுக்காகச் சிறப்பு உட்கூறு திட்ட நிதி செலவழிக்கப்பட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரும்பிக் கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவில், பொதுத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படும் என்கிற வார்த்தை மீண்டும் சட்டபூர்வமாக தவறு செய்வதற்கு வழிவகுத்துவிடும். ஆகவே, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதி, எந்தச் சூழலிலும் செலவழிக்கப்படாமல் காலாவதியாகவோ அல்லது மடைமாற்றமாகவோ ஆகிவிடக் கூடாது என்கிற நோக்கத்தில், காலாவதி ஆகாமல் அத்தியாயம் III, பிரிவு 11 (b), (c) ஆகியன மாற்றப்பட வேண்டும். பொதுத் திட்டச் செலவுகளுக்காக இந்த நிதி பயன்படுத்தக் கூடாது என்கிற திருத்தம் சேர்க்கப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செவ்வனே செயல்படுத்துவதை உறுதி செய்ய தனிச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. இதனை ஏற்று இத்துணைத் திட்டத்தின் செயல்பாட்டிற்கு வலுசேர்க்கும் விதமாக ஒரு சிறப்புச் சட்டத்தை இந்த அரசு இயற்றும். உரிய ஆலோசனைக்குப் பின்னர் அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதற்கான சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு அச்சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் 21–2–2024 அன்று அறிமுகம் செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வைத்த கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி திருத்தத்தைச் செய்ய தங்கள் மூலமாகக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2024 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 3, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவில் அத்தியாயம் II, பிரிவு 3, உட்பிரிவு 2, இனம் k–ல் 'ஓர் உறுப்பினர்' என்பதற்குப் பதிலாக, '4 உறுப்பினர்கள்' என்ற திருத்தத்தோடு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 3 திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 4 முதல் 17 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 4 முதல் 17 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2024) திருத்தப்பட்டவாறு நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2024 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

6. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்திற்கு யாரும் எந்தத் திருத்தத்தையும் தர முடியாது. (குறுக்கீடு) தருவதானாலும் ஏற்றுக்கொள்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–56 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.